TNTP150001902026

Presented on : 06-04-2026
Registered on : 07-04-2026
Decided on : 02-07-2026
Duration : 0 years, 2 months, 26 days

**சார்பு நீதிமன்றம், துறையூர்.**

**முன்னிலை .. திரு. C.விஜய் கார்த்திக் M.A,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**2026-ம் ஆண்டு ஜுலை மாதம் 02-ம் நாள் வியாழக்கிழமை**

**அசல் வழக்கு எண்.39/2026**

**CNRNo.TNTP150001902026**

கனரா வங்கி,
துறையூர் கிளை,
வங்கிக்காக முதுநிலை மேலாளர். ... வாதி

// எதிராக //

1. M. சரத்குமார்
2. P. முருகேசன்

... பிரதிவாதிகள்

இந்த வழக்கானது இறுதியாக 23.06.2026-ம் தேதி விசாரணைக்கு வந்தபோது, வாதிக்காக வழக்கறிஞர் திரு. A. நாகராஜன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பினர்களாக கருதி வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், வாதி தரப்பில் நிகழ்த்திய வாதங்களை கேட்டும், இதுநாள்வரை இம்மன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும். . . . .

C VIJAY KARTHIK

Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.07.02 17:19:27 +0530

## தீர்ப்புரை

வாதி வங்கியிடமிருந்து பிரதிவாதிகள் பெற்றுக்கொண்ட தொகை ரூ.2,02,300/-த்திற்கு தற்போதைய தாவா தொகை ரூ.3,37,600.69/- ம், அதற்கு 11.70% வட்டியும், 2% அபராத வட்டியும், பின்வட்டியும், வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்க ஏதுவாக தீர்ப்பாணை வழங்க வழிவகை செய்தும், மற்றும் செலவுத்தொகை கோரியும் உ.வி.மு.ச கட்டளை 7 விதி 1-ன் கீழ் வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## வாதியின் வழக்குரையின் சுருக்கம்.

(2.1)இவ்வழக்கின் 1-ம் பிரதிவாதி B.E., படிப்பிற்காக கடந்த 25.07.2014-ம் தேதி கல்வி கடன் வேண்டி பிரதிவாதிகள் வங்கியில் விண்ணப்பம் கொடுத்துள்ளார்கள். அதனை அனுசரித்து வாதி வங்கி கடந்த 28.07.2014-ம் தேதி ரூ.2,02,300/- கடன் வழங்க அனுமதி அளித்தது. அக்கடன் தொகைக்கு 11.70% வட்டி வீதம் சேர்த்து 120 சமமாத தவணைகளில் பிரதிவாதிகள் வங்கிக்கு செலுத்துவதாக ஒப்புக்கொண்டு 13.07.2014-ம் தேதி கல்வி கடன் ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள். மேற்படி கடன் அசல் வட்டி தொகைகளை ஒப்புக்கொண்டு 1,2 பிரதிவாதிகள் 18.07.2017, 14.12.2018, 07.11.2021 மற்றும் 18.10.2024 தேதிகளில் கடன் உயிர்ப்பு கடிதங்கள் எழுதிக்கொடுத்துள்ளார்கள். இந்நிலையில் பிரதிவாதிகள் ஒப்புக்கொண்ட தவணைப்படி கடன் தொகையை செலுத்தாத காரணத்தினால் தொகையை செலுத்த கோரி வங்கியின் மேலாளர் பல முறை நேரில் கேட்டும், செலுத்தாத காரணத்தினால் கடந்த 16.11.2022-ம் தேதி அசல் வட்டி தொகைகளை செலுத்தும்படி பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி கடன் நிலுவைத்தொகை கொண்ட வங்கி கணக்கு பேரேட்டின் கணினி நகல்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி கடன் தொகைகளை வசூலிக்க வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார்கள்.

3.தாவாவிற்கான விசாரணையின்போது வாதி தரப்பில் வாதி வங்கியின் மேலாளர் திரு.ஜார்ஜ் ஜான்சன் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 12 வரையிலான

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.07.02 17:19:33 +0530

ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் பிரதிவாதிகள் ஆஜராகாததால் வருகையில்லா எதிரவராக கருதப்பட்டு வாதி தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சி மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் தீர்ப்பளிக்கப்படுகிறது.

4.இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் எதிரவரில்லா நிலையில் வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>தீர்வு ..</u>**

(5.1)வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் வழக்கு கோப்புடன் இணைத்து பரிசீலிக்கப்பட்டது. பிரதிவாதிகள் வாதி வங்கியில் கடன் கோரியிருக்கிறார்கள் என்பதை கடனுக்கான விண்ணப்பம் வா.சா.ஆ.1-ன் மூலம் அறியமுடிகிறது. அவருக்கு ரூ.2,02,300/-ம், கடன் வழங்க வாதி வங்கி இசைவளித்துள்ளது என்பதை வா.சா.ஆ.3 -ன் மூலம் அறியமுடிகிறது. பிரதிவாதிகள் மேற்படி கடன் தொகையை வட்டியுடன் திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்பதை வா.சா.ஆ.4-ன் மூலம் அறியமுடிகிறது. பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டபடி கடன் தொகையை திருப்பி செலுத்தவில்லை என்பதால் வாதி வங்கி கடன் தொகையை திருப்பி செலுத்தக்கோரி பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளது என்பதை வா.சா.ஆ.5 ஆவணம் மூலம் அறியமுடிகிறது. மேற்படி அறிவிப்பை 1-ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பியுள்ளார் என்பதை வா.சா.ஆ.6-ன் மூலமும், 2-ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டுள்ளார் என்பதை வா.சா.ஆ.7-ன் மூலம் அறியமுடிகிறது. கடன் தொகையினை ஒப்புக்கொண்டு 18.07.2017, 14.12.2018, 07.11.2021 மற்றும் 18.10.2024-ம் தேதிகளில் கடன் உயிர்ப்பு கடிதங்கள் எழுதிக்கொடுத்துள்ளார் என்பதை முறையே வா.சா.ஆ.8 முதல் 11 வரையிலான ஆவணங்கள் மூலம் அறியமுடிகிறது. பிரதிவாதி பெற்ற கடன் தொகை இன்னும் செலுத்தப்படாமல் நிலுவையிலுள்ளது என்பதை வா.சா.ஆ.12-ன் மூலம், அறியமுடிகிறது. மேற்கண்ட வாதி தரப்பு சான்றாவணங்களை நிரூபிக்கும் முகமாக வாதி வங்கியின் கிளை மேலாளர் வாய்மொழி சாட்சியமளித்திருக்கிறார். மேற்படி சாட்சியத்திற்கும், சான்றாவணங்களுக்கும் எதிராக பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படவில்லை. வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவுமில்லை. எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராகியுள்ளார்கள்.

C VIJAY KARTHIK

Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.07.02 17:19:37 +0530

(7.2)வங்கிக்கணக்கு பேரேட்டின் நகலான வா.சா.ஆ.12 -ன் படி தாவா நிலுவை தொகையை அறியமுடிகிறது. வாதி தரப்பு ஆவணங்களை நிரூபிக்கும் முகமாக வா.சா.1-ன் சாட்சியம் அமைந்திருக்கிறது. மேற்கண்ட வாதி தரப்பு சான்றாவணங்கள், வாதி தரப்பு சாட்சியம் ஆகியவைகளுக்கு எதிரான சாட்சியங்கள் இல்லை. வாதி தரப்பு ஆவணங்கள் மூலம் பிரதிவாதிகள் கல்வி கடன் பெற்றதும், தற்போது வரை கல்வி கடன் தொகை திருப்பி செலுத்தவில்லை என்பதும், உயிர்ப்பிப்பு கடிதங்கள் எழுதி கொடுக்கப்பட்டது என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகளிடமிருந்து கடன் தொகையை திருப்பி பெற வாதி வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது என்பது வா.சா.ஆ.5-ன் மூலம் அறியமுடிகிறது. எனவே, வாதி தரப்பு சான்றாவணங்களும், வாதி தரப்பு சாட்சியமும் வாதி வங்கியின் வழக்கை நிரூபிக்கிறது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. வாதி வங்கியின் வழக்கு, ஆவணம் மற்றும் வாய்மொழி சாட்சியத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டிருப்பதால் வாதி கோரியுள்ள தொகைகளை பிரதிவாதிகளிடமிருந்து பெறுவதற்கு வாதி வங்கிக்கு உரிமையுண்டு என்றும் வாதி கோரிய தாவா தொகை பின் வட்டியுடன் வாதிக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. வழக்குரை தொகை ரூ.3,37,600.00-ம் அசல் தொகை ரூ.2,02,300/-க்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பு தேதி வரை 9% வட்டியும், தீர்ப்பு தேதியிலிருந்து தொகை பைசலாகும் தேதி வரை 6% பின்வட்டியும், சேர்த்து பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு செலுத்த வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இன்று 2026-ம் ஆண்டு ஜுலை திங்கள் 02-ம் நாள் சுருக்கெழுத்து தட்டச்சுருக்கு மொழியப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

C VIJAY KARTHIK

Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.07.02 17:19:44 +0530

சார்பு நீதிபதி,
துறையூர்.

**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>**

வா.சா.1 .. ஜார்ஜ் ஜான்சன் (வங்கி கிளை மேலாளர்)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | .. | 25.07.2014 | கடன் விண்ணப்ப படிவம் |
| வா.சா.ஆ.2 | .. | 30.06.2014 | Bonafide Certificate |
| வா.சா.ஆ.3 | .. | 28.07.2014 | கடன் அனுமதி கடிதம் |
| வா.சா.ஆ.4 | .. | 13.07.2014 | கடன் ஒப்பந்த பத்திரம் |
| வா.சா.ஆ.5 | .. | 16.11.2022 | வாதி வங்கி பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு |
| வா.சா.ஆ.6 | .. | | 1-ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிய அஞ்சல் உறை |
| வா.சா.ஆ.7 | .. | | 2-ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை |
| வா.சா.ஆ.8 | .. | 18.07.2017 | பிரதிவாதிகள் வங்கிக்கு எழுதி கொடுத்த கடன் உயிர்ப்பு கடிதம் அசல் |
| வா.சா.ஆ.9 | .. | 14.12.2018 | பிரதிவாதிகள் வங்கிக்கு எழுதி கொடுத்த கடன் உயிர்ப்பு கடிதம் அசல் |
| வா.சா.ஆ.10 | .. | 07.11.2021 | பிரதிவாதிகள் வங்கிக்கு எழுதி கொடுத்த கடன் உயிர்ப்பு கடிதம் அசல் |
| வா.சா.ஆ.11 | .. | 18.10.2024 | பிரதிவாதிகள் வங்கிக்கு எழுதி கொடுத்த கடன் உயிர்ப்பு கடிதம் அசல் |
| வா.சா.ஆ.12 | .. | 18.11.2025 | வங்கி கணக்கு பேரேட்டின் கணினி நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் .. இல்லை.</u>**

C VIJAY KARTHIK

Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.07.02 17:19:49 +0530

சார்பு நீதிபதி,
துறையூர்.